People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
# 01.04.2009 முதல் 11.04.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 1. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணி அருகே உள்ள கருமாத்தூர் கோட்டையூர் வலக்கை சேர்ந்த சின்னச்சாமி மனைவி சோபனாதேவி (30) சோபனாதேவியை அவரது கணவர் மற்றும் கணவர் குடும்பத்தினர் வரதட்சணை கேட்டு சித்ரவதை செய்துள்ளனர். இது பற்றி சோபனாதேவி உசிலம்பட்டி மகளிர் காவல் நிலையத்தில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 2. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** அவனியாபுரம் கீரைத்துறை முக்கநாடார் சந்தை தெருவைச் சேர்ந்த குமரையா மகள் முத்து என்ற முத்துமணி (14). முத்துமணி மதுரை சிந்தாமணி அருகே உள்ள ரைஸ்மில்லில் வேலை செய்து வந்தவர், ரைஸ் மில்லில் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 3. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** அலங்காநல்லூர் பாலமேடு திருமலைநாயக்கர் தெருவைச் சேர்ந்த மகாலட்சுமி மகள் நாகஜோதி (18) நாகஜோதிக்கும் இவரது உறவினர் ராதாகிருஷ்ணனுக்கும் இடையே உள்ள் முன் விரோதம் காரணமாக நாகஜோதியை மானப்பங்கம் செய்துள்ளார். இது குறித்து நாகஜோதி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 4. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே ஆண்டி கோயில்பட்டியைச் சேர்ந்த ராஜேந்திரன் மகள் சத்யா (20) சத்யா வீட்டில் தனியாக இருந்த பொழுது அதே பகுதியைச் சேர்ந்த ராஜாங்கம் பாலியல் பலாத்காரம் செய்ததோடு திருமணம் செய்ய மறுப்பு. இது குறித்து போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 5. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** கருப்பாயூரணி போலீஸ் சரகத்திற்குட்பட்ட அன்புநகர் தாசில்தார் பகுதியைச் சேர்ந்த பழனிச்சாமி மனைவி மீனாட்சி (63) கணவரை பிரிந்து வாழ்ந்த மீனாட்சி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 6. | 01.04.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தேன்–கனிக்கோட்டை வட்டம் கல்கேரி கிராமத்தில் உள்ள தலித் மக்கள். கல்கேரி கிராம்தில் தலித் மக்கள் தொடர்ந்து தாக்கப்படுவதைக் கண்டித்து மார்க்சிஸ்ட் சாபில் ஆர்பாட்டம். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** மாங்குளப்பட்டியை சேர்ந்த ராசாத்தியை அவரது கணவர் பெரியசாமி வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளார். இதனால் மனமுடைந்த ராசாத்தி 2006ல் தற்கொலை செய்து கொண்டார். இவ்வழக்கு மகளிர் கோர்டில் நடந்தது. இவ்வழக்கில் பெரியசாமிக்கு ஆயுள் தண்டனை வழங்கப்பட்டது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 8. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடி ஏட்டு நெல்சன் குமார் மனைவி ஞானஅமிர்தம் (40). அரசு பள்ளி தமிழாசிரியை ஞானஅமிர்தத்தை அவரது கணவர் ஏட்டு நெல்சன்குமார் (42) மற்றும் அவரது உறவினர்கள் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியுள்ளனர். இது தொடர்பாக அமிர்தம் காவல் நிலையத்தில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 9. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** வண்டியூரைச் சேர்ந்த பாண்டிச்செல்வி (34) பாண்டிச்செல்வி தெப்பகுளம் பகுதியில் உள்ள மேல்நிலைப்பள்ளியில் டைப்பிஸ்டாக வேலை பார்த்து வந்துள்ளார். மேலமாசி வீதியைச் சேர்ந்த உதயக்குமார் அப்பள்ளியில் வேலை பார்த்து வந்தார். இருவரும் 6 வருடமாக காதலித்து வந்துள்ளனர். தற்போது உதயகுமார் திருமணம் செய்ய மறுப்பு. இது பற்றி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 10. | 01.04.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள கல்லம்பட்டியைச் சேர்ந்த மணிவாசகம் மனைவி ஜெயபாரதி. மூன்று மாத கர்ப்பிணியான ஜெயபாரதி விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 11. | 01.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதி தாலுகா, வட்ட வழங்கல் அலுவலர் விஜயா, சிவில் சப்ளை தலைமை எழுத்தர் பொன்னுச்சாமி ஆய்வாளர் கருப்பையா கமுதி வட்ட வழங்கல் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு போலீசார் சோதனை நடத்தினர். இந்த சோதனையில் கணக்கில் காட்டப்படாத ரூ. 5 ஆயிரத்தை போலீசார் பறிமுதல் செய்தனர். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| 12. | 02.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் அருகே உள்ள மீனாட்சிபுரம் கிராமத்தை சேர்ந்த ஜெயராஜ் மனைவி முருகேஸ்வரி மகள்கள் பிரியா (9), செல்வி (8) ஜெயராஜுக்கு சரியான வேலை இல்லாததால் கணவன், மனைவிக்கும் இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. சம்பவம் நடந்த அன்று கணவன், மனைவிக்கும் இடையே ஏற்பட்ட தகராறில் ஜெயராஜ் வீட்டை விட்டு வெளியே | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சென்று மீண்டும் வீட்டிற்கு வரும் பொழுது 2 குளிர்பானங்கள் வாங்கி வந்துள்ளார். இதை குடித்த அவரது குழந்தைக் இறந்துள்ளனர். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 13. | 02.04.09 | **மதுரை மாவட்டம்:** புதுராமநாதபுரம் ரோடு சுண்ணாம்பு காளவாசல் பகுதியைச் சேர்ந்தவர் கற்பகவள்ளி (26) கற்பகவள்ளி வேறு சமூகத்தை சேர்ந்த வினோத்துடன் பெற்றோரை எதிர்த்து காதல் திருமணம் செய்து கொண்டதால் கற்பகவள்ளியின் உறவினர் செந்தில்குமார் அவரது தாய் கேலி கிண்டல் செய்ததுடன் மானபங்கம் செய்ய முயற்சித்துள்ளார். இது பற்றி கற்பகவள்ளி போலீசுல் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 14. | 02.04.09 | **தேனி மாவட்டம்:** மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தேனி மாவட்ட செயற்குழு உறுப்பினர் டி. வெங்கடேசன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினர் டி. வெங்கடேசன்கட்சிப் பணியாற்றி விட்டு வீடு திரும்பிய போது ஆண்டிப்பட்டி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் முத்து பிரேம்சந்த் என்பவர் தரக்குறைவாக பேசி அடித்து போலீஸ் ஜீப்பில் ஏற்றி காவல் நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கியுள்ளார். மேலும் அவரது செல்போனை பிடுங்கிக் கொண்டு அதிகாலை 4.30 மணி வரை சட்ட விரோதமாக காவலில் வைத்துள்ளனர். மார்க்சிஸ்ட் கட்சியினர் சம்பவத்தை எதிர்த்து ஆர்பாட்டம். | காவல் நிலையச் சித்திரவதை. | தீக்கதிர் |
| 15. | 02.04.09 | **மதுரை மாவட்டம்:** திருப்புவனம், பூவந்தி கிராம மக்கள் கிரானைட் ஆலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பூவந்தி கிராமம் நிலத்தடி நீரில் ரசாயனம் கலந்து குடிநீர் வருவதால் பாதிப்பு ஏற்படுவதாக கூறி அனைத்திந்திய ஜனநாயக மாதர் சங்கம் மற்றும் கிராம மகளிர் குழுச் சார்பில் மாவட்ட கலெக்டரிடம் புகார் கொடுத்தனர். | சுற்றுச் சூழலுக்கு எதிரான வன்முறை. | தீக்கதிர் |
| 16. | 02.04.09 | **வேலூர் மாவட்டம்:** நாட்றம்பள்ளி அடுத்த மல்லகுண்டாவைச் சேர்ந்த சீனிவாசன் மனைவி சுகுணா (26) சுகுணாவை அவரது மாமியார் அடிக்கடி திட்டிக் கொண்டே இருந்ததால் மனமுடைந்த சுகுணா தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 17. | 02.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** சாயல்குடி அருகே கடந்த விருந்த 200 மூட்டை பொது வழங்கல் அரிசியையும், கடத்தலுக்கு பயன்–படுத்தப்பட்ட சரக்குந்துகளையும் காவலர்கள் பறிமுதல் செய்தனர். | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்ஓசை |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 18. | 02.04.09 | **திருச்சி மாவட்டம்:** குண்டூர் அய்யம்பட்டியைச் சேர்ந்த பாண்டியன் (50) மனைவி அஞ்சலை. பாண்டியனுக்கு குடிப்பழக்கம் இருந்ததால் கணவர் மனைவி இடையே அடிக்கடி குடும்ப தகராறு இருந்து வந்துள்ளது. இதனால் மனமுடைந்த பாண்டியன் விஷம் குடித்து தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 19. | 02.04.09 | **நாகப்பட்டினம் மாவட்டம்:** தரளிகம்பாடி வட்டம் பெரம்பூர் வடக்குத் தெருவைச் சேர்ந்த சிவானந்தம் மனைவி ஆரோக்கியமேரி (32) சிவானந்தம் வேலைக்கு செல்லாமல் குடும்பம் நடத்த பணம் தராததால் கணவன், மனைவிக்கு இடையே அடிக்கடி குடும்பத் தகராறு இருந்துள்ளது. இதனால் மனமுடைந்த ஆரோக்கியமேரி உடலில் மண்ணெணைய் ஊற்றி தீ வைத்துக் கொண்டார். இதில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 20. | 02.04.09 | **மதுரை மாவட்டம்:** ஆயுதப்படை பெண் போலீஸ் வேல்விழி மார்ச் 11ம் தேதி மர்மமான முறையில் இறந்து கிடந்தார். இது குறித்து போலீசார் நடத்திய விசாரணையில் வேல்விழியின் சித்தப்பா ஏட்டு பழனிவேல் கொலை செய்தது தெரிய வந்துள்ளது. இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 21. | 02.04.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன்சத்திரம் செக் போஸ்ட்டில், திண்டுக்கல் உணவுப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு இன்ஸ்பெக்டர் சிகாணமி வாகன சோதனையில் ஈடுபட்ட போது கடத்தப்பட்ட 25 மூட்டை ரேசன் அரிசி பறிமுதல் செய்யப்பட்டது. | ரேசன் அரிசி பறிமுதல் | தினகரன் |
| 22. | 02.04.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உறங்கான்பட்டியை சேர்ந்த கூலி தொழிலாளி ஆறுமுகம் மனைவி பாண்டியம்மாள் பிரசவத்திற்காக தனியார் மருத்துவமனையில் இருந்து அரசு மருத்துவமனைக்கு சென்றுள்ளார். ஆனால் அரசு மருத்துவமனை நர்சுகள் அவரை தனியார் மருத்துவமனைக்கு போகுமாறு கூறியதால் பாண்டியம்மாளுக்கு நடுரோட்டில் பிரசவம் நடந்தது. | மருத்துவமனை அலட்சியம் | தினகரன் |
| 23. | 02.04.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே சூரக்குண்டு பகுதியைச் சேர்ந்த ராமமூர்த்தி மனைவி கருப்பாயி (28). ராமமூர்த்தி கடன் பெற்று துபாய் சென்றுள்ளார். கடன் கொடுத்தவர்கள் கடனை கருப்பாயிடம் கேட்டுள்ளனர். கருப்பாயி கணவரிடம் கேட்ட | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போது ராமமூர்த்தி பணம் தர முடியாது என்று கூறியதால் மனமுடைந்த கருப்பாயி தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | | |
| 24. | 02.04.09 | **சிவகங்கை மாவட்டம்:** வேம்பங்குடியைச் சேர்ந்த காசி மகள் நாகலட்சுமியை அதே ஊரைச் சேர்ந்த வீரகுமார் கேலி செய்துள்ளார். இதை தட்க் கேட்ட காசியை வீரக்குமார் அவரது உறவினர் அரிவாளால் தாக்கியதில் படுகாயம் அடைந்த காசி மருத்துவமனையில் அனுமதி. போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 25. | 02.04.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி தாலுகா டி. மீனாட்சிபுரத்தை சேர்ந்தவர் முனியாண்டி மகள் மல்லிகா. மல்லிகாவுக்கும் அப்பகுதியைச் சேர்ந்த செல்வத்திற்கும் கள்ளக்காதல் இருந்துள்ளது. இதில் மல்லிகா கர்ப்பமுற்று பெண் குழந்தை பெற்றுள்ளார். அப்பெண் குழந்தையை மல்லிகா செல்வம் மற்றும் குடும்பத்தார் கழுத்தை நெறித்து கொலை செய்துள்ளனர். இந்த வழக்கு நீதிமன்றத்தில் தொடரப்பட்டது. இதில் செல்வம், மல்லிகாவுக்கு ஆயுள் தண்டனையும், உறவினர்களுக்கு 10 ஆண்டு சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 26. | 02.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி அருகே மாரனேரி ஊராட்சியில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் அந்த பகுதியில் உள்ள பெண்களுக்கு குறைவான தினக்கூலி கொடுத்ததால் பெண்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 27. | 02.04.09 | **வேலூர் மாவட்டம்:** அல்லாபுரத்தில் அரசினர் பிற்காப்பு இல்லம் பெண்கள் நித்யபாலா (27) அசந்தா (28) இருவரையும் காணவில்லை. இது பற்றி இல்ல கண்காணிப்பாளர் உமாமகேஸ்வரி போலீசில் புகார் செய்துள்ளார். போலீசார் வழக்கு ப . | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 28. | 02.04.09 | **சென்னை மாவட்டம்:** மயிலாப்பூர் 14வது வார்டில் உள்ள மாநகராட்சி மக்கள் மாயனத்தில் பணியாற்றும் ரவிச்சந்திரன் மற்றும் துரை ஊழியர்கள் பிரேதங்களை எரிப்பதற்கு பணம் கேட்டதாக புகார். | லஞ்சம் | ஜனசக்தி |
| 29. | 02.04.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** சிக்கிரமேடு நரிக்குறவர் பகுதியைச் சேர்ந்தவர் வான்மதி (11)க்கு அச்சமூகத்தினர் திருமணம் செய்ய முயற்சி. இது குறித்து அப்பகுதியைச் சார்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனம் கலெக்டரிடம் புகார். | குழந்தை திருமணம் | The Hindu |
| 30. | 03.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** இராமேஸ்வரம் மீனவர்கள் 23 நடுக்கடலில் மீன் பிடித்துக் | மீனவர்களுக்கு எதிரான | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கொண்டிருக்கும் பொழுது சிங்கள கடற்படையினர் அவர்களை கைது செய்து சிறையில் அடைந்தனர். | வன்முறை | |
| 31. | 03.04.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் ஒன்றியம் மேலக்கோட்டை கிராமத்தில் தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீர் 100 நாள் வேலை உறுதி திட்டம் நடைபெற்று வருகிறது. இதில் முறைகேடு நடப்பதாகவும் பஞ்சாயத்து தலைவர் மீது நடவடிக்கை எடுக்க கோரியும் 100க்கும் மேற்பட்ட பெண்கள் திருமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் முற்றுகையிட்டு புகார் கொடுத்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 32. | 03.04.09 | **சென்னை மாவட்டம்:** சூளைமேடு பெரியார் பாதையில் உள்ள பாரதி தெருவில் உள்ள ராஜீலு தான் கட்டிய புதிய வீட்டிற்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்கு குடிநீர் வாரியத்தில் விண்ணப்பித்துள்ளார். குடிநீர் இணைப்பு பெற ரூ. 10.000 லஞ்சம் தர வேண்டும் என எம்.எம்.டி.ஏ குடியிருப்பில் உள்ள குடிநீர் வாரிய உதவிப் பொறியாளர் குப்புராசு கேட்டுள்ளார். | லஞ்சம் | தமிழ்ஓசை |
| 33. | 03.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதியைச் சேர்ந்தவர் இருளப்பன் வழக்கு தொடர்பாக பெருநாழி காவல் நிலையத்திற்கும் சென்ற போது அவருக்கு காவல் ஆய்வாளர் ஜான்சிராணிக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டதில் வக்கீல் மீது வழக்கு பதிவு செய்த ஒரு நாள் முழுவதும் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளார். இவ்வழக்கை கண்டித்து வழக்கறிஞர்கள் ஆர்பாட்டம் செய்தனர். மேல்நீதிமன்ற புறக்கணிப்பில் ஈடுபட்டனர். | காவல் நிலைய வன்முறை | தமிழ்ஓசை |
| 34. | 03.04.09 | **சேலம் மாவட்டம்:** மேட்டூர் தாலுகா கூலையூரைச் சேர்ந்த கருப்புசெட்டி மனைவி மகேஸ்வரி (25). கருப்புசெட்டி வெடிப் பொருட்கள் தயாரித்து விற்பனை செய்து வந்தார். கடந் பிப்ரவரியில் ஏற்பட்ட விபத்தில் கருப்புசெட்டி இறந்ததால் கணவர் சென்ற இடத்திற்கு செல்ல வேண்டும் என்று கூறிய மகேஸ்வரி 2 குழந்தைகளை கொன்று அவரும் தற்கொலை செய்து கொண்டார். இது பற்றி போலீசார் வழக்கு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 35. | 03.04.09 | **தர்மபுரி மாவட்டம்:** பென்னாகரம் அருகே உள்ள இராஜாவூர் அருந்ததியர் குடியிருப்பைச் சேர்ந்த சின்னராசு மனைவி பழனியம்மாள் மற்றும் அவரது கணவர் 3 மகன்கள் 35 ஆண்டுகளாக ஆந்திர மாநிலம் சித்தாலா பகுதியில் சின்ன கேசவன் என்பவருக்கு சொந்தமான கல்குவாரியில் கொத்தடிமையாக இருந்துள்ளார். அங்கிருந்து தப்பி வந்த | கொத்தடிமை | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பழனியம்மாள் தர்மபுரி மாவட்ட ஆட்சியரிடம் புகார் அளித்துள்ளார். | | |
| 36. | 03.04.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** சத்திரப்பட்டி, வத்தக்கவுண்டன்வலசில் பதனீர் வியாபாரி சுப்பிரமணியன். சத்திரப்பட்டி எஸ்.ஐயாக பணி புரியும் திலகா சுப்பிரமணியன் கள் விற்பதாக வழக்கு பதிவு செய்து ரூ. 7,500 லஞ்சம் பெற்றுள்ளார். இது குறித்து சுப்பிரமணியடம் போலீசில் புகர். | காவலர் லஞ்சம் | தினமலர் |
| 37. | 03.04.09 | **சிவகங்கை மாவட்டம்:** இளையான்குடி தாலுகா சித்தூரணியைச் சேர்ந்த உடையான் மகள் தமிழ்செல்வி (20). அப்பகுதியைச் சேர்ந்த சுரேஷ் என்பவர் காதலித்து கர்ப்பமாக்கி விட்டு திருமணம் செய்ய மறுப்பு. இது பற்றி தமிழ்செல்வி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 38. | 03.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகேயுள்ள மம்சாபுரத்தை சேர்ந்த திருப்பதிராஜ் பிப்ரவரி மாதம் வாங்கிய புது வீட்டின் பெயரை மாற்றுவதற்காக நகராட்சியில் விண்ணப்பித்துள்ளார். விண்ணப்பித்து ஒரு மாதம் ஆகியும் எந்த தகவலும் வராததில் நகராட்சியில் கலெக்டர் சுந்தர்ராஜை அணுகியுள்ளார். பெயர் மாற்றுவதற்கு ரூ. 500 லஞ்சம் தர வேண்டும் என சுந்தர்ராஜ் கேட்டதால் இது பற்றி திருப்பதிராஜ் போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | தமிழ்சுடர் |
| 39. | 03.04.09 | **புதுக்கோட்டை மாவட்டம்:** உடகாடு பகுதி கருக்காகுறிச்சியை சேர்ந்த நாச்சியான் மகள் கனகா. 11ம் வகுப்பு படிக்கும் மாணவி கனகாவை அப்பகுதியைச் சேர்ந்த நல்லதம்பி மற்றும் முருகன்கனகாவை கடத்தி சென்றுள்ளனர். இது குறித்து நாக்கியன் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 40. | 04.04.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** சங்கரன்கோவில் தாலுகா மேலமரத்தேனி கிராமத்தைச் சேர்ந்த பரமசிவன் மனைவி ஜெயக்கொடி. ஆற்றில் மணல் அள்ளுவதை பரமசிவன் மனைவி ஜெயக்கொடி போலீசில் புகார் கொடுத்ததாக அப்பகுதியைச் சேர்ந்த சில நபர்கள் ரௌடிகளை கொண்டு தாக்க முயற்சி. | மணல் கடத்தல் | S. கணேசன், RMA |
| 41. | 04.04.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** காவல் துறையினர் குற்றவாளிகளுக்கு உடந்தையாக செயல்படுதல். | காவல் நிலைய வன்முறை | கணேசன், RMA |
| 42. | 04.04.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** பாளையங்–கோட்டை தாலுகா சேவியர் காலனியைச் சேர்ந்த மாணவன் செல்வக்குமாரை பள்ளி ஆசிரியர் சார்லஸ் அடித்து துன்புறுத்துதல். | வகுப்பறை வன்முறை | கணேசன், RMA |

| | | | | |
|---|---|---|---|---|
| 43. | 04.04.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** அகஸ்திவரம் அலகப்புரம் திரு. மதி ஜோஸ்தின்மேரி என்பவரை அஞ்சு கிராமம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கிருஷ்ணராஜ் ரௌடிகளை வைத்து தாக்கமுயற்சி. | காவல் நிலைய வன்முறை | கணேசன், RMA |
| 44. | 04.04.09 | **சென்னை மாவட்டம்:** கோவளம் தர்காவை சேர்ந்த நாகூரன் மகள் வினோத்குமார் (19) தனது 16 வயதில் அப்பகுதியை சேர்ந்த அரசு என்ற அரவாணி கடத்தி கடத்தி அரவாணியாக மாற்றி பாலியல் தொழிலுக்கு ஈடுபட வைத்து, சிறை வைத்துள்ளார். அங்கிருந்து தப்பி வந்த வினோத்குமார் போலீசில் புகார். | | தினத்தந்தி |
| 45. | 04.04.09 | **மதுரை மாவட்டம்:** ஆரப்பாளையம் புது ஜெயில் ரோட்டை சேர்ந்த கணேசன் வழக்கறிஞர் ஜெகதீஸ் மண்டல் என்பவர் மீதான வழக்கு தொடர்பாக செல்லூர் போலீஸ் ஸ்டேசனுக்கு சென்றபொழுது இன்ஸ்பெக்டர் ரவீந்திரன் இல்லாததால் அவரை தேடி செல்லூர் 50 அடி ரோட்டில் பணியில் இருந்த அவரை சந்தித்த போது திடீரென வக்கீல் மற்றும் இன்ஸ்பெக்டருக்கு வாக்குவாதம் ஏற்பட்டதில் இன்ஸ்பெக்டர் வக்கீலை தாக்கி அவரது பணத்தை பிடிங்கியுள்ளார். இது குறித்து வக்கீல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். | காவல்நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 46. | 04.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிப்புத்தூர் கூனூரில் உள்ள காமராஜர் நடுநிலைப்பள்ளி ஆசிரியை தேவிகா, அந்தோணி, ஸ்டெல்லா ஆகியோரை பள்ளி செயலாளர் தங்கராஜ் மற்றும் அவரது சகோதாரர் பழனிசெல்வம் கையை பிடித்து இழுத்து மிரட்டியுள்ளார். இது குறித்து போலீசில் புகார். எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 47. | 04.04.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** திருச்செந்தூர் அடுத்த மணப்பாடு சிற்றூர் பகுதி மக்கள். ஆத்தூர் பகுதியில் அமைந்துள்ள வி.வி மினரல்ஸ் என்றும் தனியார் மணல் ஆலை தனியார் துறைமுகம் அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உழவர்கள் மற்றும் மீனவர்கள் மக்களவை தேர்தலை புறக்கணிப்பதாக வான்வெளிபாதைகள்அமைத்துள்ளனர். | | தமிழ்ஓசை |
| 48. | 04.04.09 | **திருவாரூர் மாவட்டம்:** நீடாமங்கலம் அருகே வெண்ணாற்றுக் கரையில் அரசின் அனுமதியின்றி மணல் எடுப்பதாக கிராம நிர்வாக அலுவலர் போலீசில் புகார். | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 49. | 04.04.09 | **பெரம்பலூர் மாவட்டம்:** திருமாற்றுதுரை சிற்றூர் மக்கள் தேமுதிகவின் முன்னாள் உறுப்பினர் சார்லசு குடிபோதையில் நாள்தோறும் தகராறு செய்து அடிதடியில் | காவல் அலட்சிய போக்கு | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இறங்கிவிடுவதால் அவர் மீது காவல்துறை நடவடிக்கை எடுக்காததை எதிர்த்து காவல்துறையை கண்டித்து சிற்றூர் மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். | | |
| 50. | 05.04.09 | **சிவகங்கை மாவட்டம்:** மானாமதுரை அடுத்து தான் ஏடகர் பஞ்சாயத்து தலைவர் 100 நாள் வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் 57,000 ரூபாய் பணம் கையாடல் செய்யப்பட்டுள்ளார். இதனால் சிவகங்கை கலெக்டர் பதவி நீக்கம் செய்துள்ளார். | மோசடி | தமிழ்சுடர் Express |
| 51. | 05.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** சாத்தூர் அருகே உள்ள குண்டலமுத்தூர் கிராமத்தை சேர்ந்த பாண்டி திருட்டு வழக்கில் கைதாகி மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார். சிறையில் நெஞ்சு வலியால் இறந்தார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | சிறை கைதி சாவு | தினமணி |
| 52. | 05.04.09 | **கடலூர் மாவட்டம்:** வடலூர் கருங்குழியைச் சேர்ந்த வைத்தியலிங்கம் மகள் வினோதினியை வீட்டு வேலை வாங்கி தருவதாக கூறி சத்யா மற்றும் ஸ்டீபன்ராஜ் அழைத்து சென்று அடித்து உதைத்து விபச்சாரத்தில் ஈடுபடுத்தியுள்ளனர். விபச்சார கும்பலில் இருந்து தப்பி வந்த வினோதினி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 53. | 05.04.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** கோவில்பட்டி அருகே கே. ராமநாதபுரத்தை சேர்ந்த கருப்புசாமி மனைவி காமாட்சி இவர்களின் மகள் தனலெட்சுமி கழுகுமலையில் புனித சூசை மேல்நிலைப்பள்ளியில் +2 படித்து வந்துள்ளார். கடந்த டிசம்பர் 22 பள்ளிக்கு சென்ற இவர் வீடு திரும்பவில்லை. இது பற்றி கருப்புசாமி போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 54. | 05.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பேராவூரைச் சேர்ந்த ராஜா மனைவி நம்மீஸ்வரி. ராஜா கடந்த 2 ஆண்டுகளாக துபாயில் வேலை பார்தது வந்தவர். நம்மீஸ்வரியின் நடத்தையில் சந்தேகப்பட்டு விவாகரத்து நோட்டீஸ் அனுப்பியுள்ளார். இந்நிலையில் மீண்டும் சேர்ந்து வாழ வேண்டும் என்று ராஜா கூறியதின் பேரில் நம்மீஸ்வரி சென்றுள்ளார். அங்கு இருவருக்கும் இடையில் நடந்த வாக்குவாதத்தில் கோபமுற்ற ராஜா நம்மீஸ்வரி கழுத்தை நெறித்து கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 55. | 05.04.09 | **மதுரை மாவட்டம்:** ஜெய்ஹிந்த்புரம் பாரதியார் ரோட்டைச் சேர்ந்த பாவார் மகள் சையது அலிபாத்திமா. சையது அலி பாத்திமாவை அவரது கணவர் வரதட்சணைக் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கேட்டு கொடுமைப்படுத்தியதால் மனமுடைந்து தற்கொலை செய்து கொண்டார். | | |
| 56. | 05.04.09 | **மதுரை மாவட்டம்:** ரிசர்வ்லைன் அருகே துப்பரவு பணியாளர் காலனியைச் சேர்ந்த மாயகிருஷ்ணன் மனிவ மரகதம். கணவன்–மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் மனமுடைந்த மரகதம் மண்ணெணைய் ஊற்றி தீ வைத்து இறந்தார். அப்பொழுது அங்கு நடைபெற்று கொண்டு இருந்த மாரியம்மன் கோவில் திருவிழாவில் நடைகள் சாத்தப்பட்டு தீட்டுகழிவு மந்திரங்கள் ஓதப்பட்டன. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 57. | 06.04.09 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டி அருகே உள்ள செமினிப்பட்டி கிராம மந்தையில் உள்ள பள்ளி மாணவர்கள் துவக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளி யாக உயர்த்தப்பட்டதால் வகுப்புகள் பற்றாக்குறையால் மாணவர்கள் அவதி. | பள்ளி வன்முறை | தினமலர் |
| 58. | 06.04.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் தேவி நகரைச் சேர்ந்த சுந்தரபாண்டி மனைவி பிரியா (26). பிரியா வேலைக்கு சென்று திரும்பும் போது அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் தொடர்ந்து கேலி செய்து வந்துள்ளனர். இதை தட்டிக் கேட்ட சுந்தரபாண்டியை கொலை செய்து விடுவதாக மிரட்டல் விடுத்துள்ளனர். இது பற்றி பிரியா போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 59. | 06.04.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** பாளையங்கோட்டை அகில இந்திய கட்சித் தொண்டர்கள். 05.04.09 நடைபெற்ற கட்சி கூட்டத்தில் போலீசாருக்கும் கட்சித் தொண்டர்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதில் கட்சித் தொண்டர்களை போலீசார் தடியடி நடத்தினர். | காவல் நிலைய வன்முறை | தினமணி |
| 60. | 06.04.09 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி தந்தை பெரியார் நகரில் வசிக்கும் சின்னக்கருப்பன் மனைவி உஷாவி இருவருக்கும் இடையே குடும்ப பிரச்சனை இருந்துள்ளது. இதனால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வருவதால் உஷாவின் தம்பி கார்த்திக் மற்றும் தாய் சாவித்திரி சின்னக்கருப்பன் வீட்டிற்கு சென்று கேட்ட போது வாக்குவாதம் ஏற்பட்டதில் சின்னக்கருப்பன் போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 61. | 06.04.09 | **தேனி மாவட்டம்:** வருசநாடு கடலை–மயிலை ஒன்றியம் பகுதி மக்கள். கடமலைக்குண்டு பகுதியில் வைகை ஆறு மற்றும் ஓடைப்பகுதியில் நள்ளிரவு நேரங்களில் மணல் திருட்டு தொடர்ந்து நடைபெற்று வருவதால் அப்பகுதியில் நிலத்தடி நீர் குறைந்து வருகிறது. இது பற்றி சம்மந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்க எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். | மணல் கொள்ளை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| 62. | 06.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கீழக்கரை அருகே மாயக்குளம் ரேசன் கடையிலிருந்து கடத்தி செல்வதற்காக 20 மூட்டைகள் ரேசன் அரிசி ஏற்றிக் கொண்டிருந்த போது பொது மக்கள் தடுத்து காவல்துறையிடம் ஒப்படைத்தனர். | ரேசன் அரிசி கடத்தல். | தீக்கதிர் |
| 63. | 07.04.09 | **மதுரை மாவட்டம்:** செல்லூரைச் சேர்ந்த சந்திரசேகர் (32) மனைவி அனுசுயா (29) அனுசியாவை அவரது கணவர் சந்திரசேகர் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்தியதால் அனுசியா போலீசில் புகார். வழக்கு பதிவு. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 64. | 07.04.09 | **கடலூர் மாவட்டம்:** சேத்தியாத்தோப்பு வருவாய் அதிகாரி ஜெயராமன். சேத்தியாதோப்பு அருகே உள்ள அழிச்சக்குடி கிராமத்தில் வெள்ளாற்றில் நள்ளிரவில் திருட்டு தனமாக மண் அள்ளிக் கொண்டிருந்தவர்களை தடுக்க முயன்ற வருவாய் அதிகாரி ஜெயராமனை திருட்டு கும்பல் டிராக்டர் ஏற்றி கொல்ல முயற்சி. | மணல் திருட்டு | தினத்தந்தி |
| 65. | 07.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி முதுகுளத்தூர் அருகே உள்ள செம்மாங்குடி பகுதியைச் சேர்ந்த மாணிக்கம் மகள் சுதாவை அவரது மாமனார், நாத்தனார் தூண்டுதலின் பேரில் கணவர் நீலகண்டன் வரதட்சணை கேட்டு சித்திரவதை செய்துள்ளார். இதில் காயமடைந்த சுதா மருத்துவமனையில் அனுமதி. போலீசில் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 66. | 07.04.09 | **இரமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அருகே மஞ்சூரைச் சேர்ந்த சுரேஸ் (23) மனைவி ஹேமலதா கடந்த பிப்ரவரி 10ல் கலப்பு திருமணம் செய்து கொண்டனர். இதை முறையாக பதிவு செய்ய சத்திரக்குடியில் உள்ள போகலூர் பத்திர பதிவு அலுவலகத்தை அணுகிய போது சார் பதிவாளர் திருசங்கரை அணுகிய போது ரூ. 3 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | லஞ்ச ஊழல் | தினமலர் |
| 67. | 07.04.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி அருகே உள்ள அரப்படித்தேவன்பட்டி ஆதிதிராவிடர் மக்களுக்கு மனைஉரிமைச் சான்று வழங்கப்பட்ட இடத்தில் மற்றொரு சமூகத்தினர் கோயில் கட்ட முயற்சித்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. இது பற்றி மாவட்ட கலெக்டரிடம் புகார். | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 68. | 07.04.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** இராயக்கோட்டை அடுத்த எடவனஹற்றியைச் சேர்ந்த கந்தன் மகள் ஜீவா (17) +2 படிக்கும் மாணவி ஜீவா | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கடந்த 30ம் தேதி முதல் காணவில்லை. இது குறித்து பெற்றோர் போலீசில் புகார். வழக்கு பதிவு. | | |
| 69. | 08.04.09 | **மதுரை மாவட்டம்:** அரசு ராஜாஜி மருத்துவமனை செவிலியர் விடுதி மாணவியருக்கு திடீரென வாந்தி, மயக்கம் ஏற்பட்டதால் அனைவரும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இது குறித்து அதிகாரிகள் ஆய்வு. | | தினமணி |
| 70. | 08.04.09 | **மதுரை மாவட்டம்:** புதுராமநாதபுரம் சாலையில் உள்ள மில் பகுதியில் அரிசி கடத்தல் அதிகாரிகள் விசாரணை. | ரேசன் அரிசி கடத்தல் | தினமணி |
| 71. | 08.04.09 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** வாலாசாபாத் வண்டலூர் சாலையில் ரகசியமாக கடத்த இருந்த மணலை அதிகார்கள் கைப்பற்றினர். | மணல் கடத்தல் | தமிழ்சுடர் |
| 72. | 08.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** தேவிபட்டினம் சலீம் மகள் பாத்திமா வஞ்சரை (140. 14 வயதுடைய பாததிமாவை அப்பகுதியைச் சேர்ந்த முனியசாமி கடத்தி விட்டதாக சலீம் போலீசில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 73. | 08.04.09 | **தேனி மாவட்டம்:** பெரியகுளம் அருகே உள்ள கீழவடகரையை சேர்ந்த தங்கபாண்டி மனைவி ராதா. தங்கபாண்டி வேலைக்கு போகாமல் தினமும் குடித்து விட்டு வந்து ராதாவிடம் வரதட்சணைக் கேட்டு சித்திரவதை செய்துள்ளார். இது பற்றி ராதா அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 74. | 09.04.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** குளச்சல் அருகே குடிவிளையைச் சேர்ந்த சுஜி. சுஜி கடந்த 26ம் தேதி மர்மமான முறையில் மயங்கி கிடந்தார். ஓய்வு பெற்ற காவல்துறை ஆய்வாளர் சிங்கராயன் மகன் மோகன்ராஜ் மற்றும் அவரது நண்பர் அஜய் கடத்தி சென்று பாலியல் சித்ரவதை செய்து நகைகளை கொள்ளை அடித்து சென்றது விசாரணையில் தெரிய வந்தது. இவர்கள் இது போன்ற செயல்களில் ஈடுபட்டுள்ளது விசாரணையில் தெரிய வந்துள்ளது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 75. | 09.04.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** ஒட்டப்பிடாரம், குறுக்குசாலை முதன்மைச் சாலையைச் சேர்ந்த கிருட்டிணசாமி மனைவி முத்துமாரி. மனநிலை பாதிக்கப்பட்ட முத்துமாரியை அவரது கணவர் கிருட்டிணசாமி கிணற்றில் தள்ளி கொலை செய்துள்ளார். இது பற்றி போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 76. | 09.04.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** நாகர்கோவிலை அடுத்த கீழ்க்கிருட்டிணம் புதுரைச் சேர்ந்த | பெண்களுக்கு எதிரான | தமிழ்ஓசை |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தவமணி மகள் தீபா. தீபாவின் கணவர் இராமசாமி அவரது மாமனார், மாமியார், நாத்தனார் வரதட்சணை கேட்டு கொடுமைப்படுத்தி சித்திரவதை செய்ததுடன் அடித்து கொலை செய்துள்ளனர். இது குறித்து தீபா பெற்றோரிடம் போலீசில் புகார். | வன்முறை | |
| 77. | 09.04.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** வில்லுக்குறி அருகே மாடத்தட்டு விளையைச் சேர்ந்த ஜார்ஜ் அருள் மனைவி புஷ்பலதா. ஜார்ஜ் அருளுக்கும் புஷ்பலதாவுக்கும் இடையே குடும்பத் தகராறு இருந்து வந்துள்ளது. இந்நிலையில் மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்ட ஜார்ஜ் அம்மி கல்லைப் போட்டுகொலை செய்துள்ளார். இது குறித்து போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்ஓசை |
| 78. | 09.04.09 | **கரூர் மாவட்டம்:** லாலாபேட்டை பகுதியில் உள்ள வல்லத்தை சேர்ந்த வடிவேல். கரூர் தொழிற்பேட்டையில் அரசு வாணிபக் கழகம், மாவட்ட மேலாளர் சகுந்தலா ஆய்வு நடத்தியுள்ளார். அப்பொழுது மதுகடை ஊழியர் வடிவேல் விடுமுறை விண்ணப்பம் எடுத்து விடுமுறையில் உள்ளவரை சகுந்தலா பதவி நீக்கம் செய்துள்ளார். வடிவேல் மாவட்ட மேலாளர் சகுந்தலாவிடம் கேட்ட போது ரூ. 4 ஆயிரம் லஞ்சம் கேட்டுள்ளார். இது பற்றி வடிவேல் போலீசில் புகார். | லஞ்ச ஊழல் | தமிழ்ஓசை |
| 79. | 09.04.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** வைரவனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த கேசவன் மகன் வினோத்குமார். வழிவிடு முருகன்கோவிலில் பங்கு பெற்றுவந்த வினோத்குமார் சாலையோரம் நடந்து கொண்டிருந்த போது போலீசார் தாக்கியதில் வினோத்குமார் கால் முறிவு ஏற்பட்டது. இதனால் அப்பகுதி மக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர். இது பற்றி வழக்கு பதிவு. | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 80. | 09.04.09 | **மதுரை மாவட்டம்:** கடல்புதூரை சேர்ந்த பரமேஸ்வரன் மகள் லாவண்யாவை அவரது தாயார் விபச்சாரத்தில் தள்ளியதாக லாவண்யா புகார் கூறியுள்ளார். இது குறித்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 81. | 09.04.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** அம்பாசமுத்திர போலீசார் வீரபத்திரன் மற்றும் தம்பிராஜ் பணியில் உள்ள போது குடிபோதையில் இருந்ததாக பொது மக்கள் புகார். | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 82. | 09.04.09 | **மதுரை மாவட்டம்:** வாடிப்பட்டியை சேர்ந்த பேச்சியம்மாள் 17 வயதுடைய மகளை அப்பகுதியைச் சேர்ந்த ராஜேந்திரன் திருமண ஆசை காட்டி பாலியல் பலாத்காரம் செய்ததால் மகள் வயிற்றில் உருவான கருவை குறித்து காவல்துறையில் புகார் செய்துள்ளார். ஆனால் காவலர்கள் கட்டப்பஞ்சாயத்து செய்துள்ளார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 83. | 09.04.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே திருச்சுழி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தலைக்குண்டு கிராமத்தில் உள்ள மயனா பாதையை சுற்றி தனிநபர் ஒருவர் சிதையில் செய்துள்ளதால் மயானத்திற்கு போக வழி இல்லை. இது குறித்து கிராம மக்கள் பலமுறை கலெக்டரிடம் முறையிட்டு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததால் வரும் தேர்தலை புறக்கணிக்க மக்கள் முடிவு. | தேர்தல் புறக்கணிப்பு | தமிழ்சுடர் |
| 84. | 10.04.09 | **வேலூர் மாவட்டம்:** வாலாச வட்டாட்சியர் சண்முகஜோதி மற்றும் அதிகாரிகள் சுற்றுக் காவல் பணியில் ஈடுபட்டுள்ள போது, அரசின் அனுமதியின்றி மணல் கடத்தி வந்தது வாகனம் குறித்து விசாரணை. | மணல் கடத்தல் | தமிழ்ஓசை |
| 85. | 10.04.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** எரியோடு அருகே கோவிலூரைச் சேர்ந்த கலைச்செல்வன் மனைவி காளிதேவி. கலைச்செல்வனுக்கு குடிப்பழக்கம் இருந்ததால் கணவன், மனைவி இடையே அடிக்கடி தகராறு நடந்து வந்துள்ளது. இந்நிலையில் மனமுடைந்த காளிதேவி தனது 11 மாத குழந்தையுடன் தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 86. | 10.04.09 | **மதுரை மாவட்டம்:** சவுராஷ்டிராபுரம் டீச்சர் காலனியைச் சேர்ந்த மாலதியை அவரது கணவர் சரவணன் வரதட்சணைக் கேட்டு கொடுமைப்படுத்துவதாக போலீசில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 87. | 11.04.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை தாலுகா வில்லியம்பட்டி கிராம தலித் மக்கள் வில்லிம்பட்டியில் நடந்த முத்தாலம்மன் கோவில் திருவிழாவில் கலந்து கொண்ட போது ஆதிக்க சாதியினர் தலித் இளைஞர்களை அடித்து தாக்குதல். இதில் 100 பேருக்கு பலத்த காயம் ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து வழக்கு பதிவு செய்து விசாணை | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | The New Indian Express |
| 88. | 11.04.09 | **மதுரை மாவட்டம்:** சிந்தாமணி பகுதியைச் சேர்ந்த முருகவேல் மகள் அறிவு (18) 10ம் வகுப்பு முடித்த அறிவு அவரது முறை மாமனை காதலித்துள்ளார். அறிவு பெற்றோர் அவரை மேற்படிப்பு படிக்க கூறியுள்ளனர். ஆனால் அறிவு தனது முறை மாமனை திருமணம் செய்ய வேண்டும் என்ற பிடிவாதத்தில் இருந்ததால், பெற்றோர்கள் ஜாதம் பார்த்துள்ளனர். ஜாதகத்தில் இருவருக்கும் பொறுத்தம் இல்லை என்றதும் மனமுடைந்த அறிவு தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 89. | 11.04.09 | **மதுரை மாவட்டம்:** திருநகர் பகுதியை சேர்ந்த அராசத்தினம் மகள் சானுஜா (17). 10ம் வகுப்பு போகவிருக்கும் சானுஜாவிற்கு டியூசன் வகுப்புகள் தொடங்கி விட்டதால் தனது | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | சித்தப்பா வீட்டில் தங்கி படித்து வந்துள்ளார். சம்பவத்தன்று டியூசன் சென்று சானுஜா வீடு திரும்பவில்லை. இது பற்றி சித்தப்பா ராமச்சந்திரன் போலீசில் புகார். | | |
| 90. | 11.04.09 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி அருகே உள்ள மணச்சை பகுதியில் உள்ள செங்கல் காளவாசலில் ரேஷன் அரிசி மூட்டைகள் பதுக்கி வைத்திருப்பதை தாசில்தார் மீரா பரமேஸ்வரி கைப்பற்றினார். | ரேசன் அரிசி கடத்தல் | தமிழ்சுடர் |
| 91. | 11.04.09 | **தேனி மாவட்டம்:** பொம்மையகவுண்டன்பட்டி பாலன்நகரைச் சேர்ந்த செந்தில்குமார் மனைவி அழகு சுரேகா (25) மகள் கிருத்திகாதர்ஷிணி. செந்தில்குமாருக்கு தொழிலில் ஏற்பட்ட நஷ்டத்தால் மனைவி நகைகளை அடகு வைத்துள்ளார். அழகு சுரேகா கோவில் திருவிழாவிற்கு போவதற்காக நகைகளை கேட்டுள்ளார். இதனால் கணவன், மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் செந்தில்குமார் மனைவி மற்றும் மகள் மீது மண்ணெணைய் ஊற்றி தீ வைத்து தானும் தீ வைத்து கொண்டார். இதில் மூவரும் உயிரிழந்தனர். போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 92. | 11.04.09 | **கோவை மாவட்டம்:** பீளமேடு பி.எஸ்.ஜி கல்லூரி முதலாம் ஆண்டு மாணவர் அகில்தேவ் (19). திருவனந்தபுரத்தை சேர்ந்த அகில்தேவ் கோவையில் தனி அறை எடுத்து தங்கி படித்து வருகிறார். அவர் தனது அறையில் இருந்த பொழுது அங்கு வந்த இரண்டாம் ஆண்டு மாணவர்கள் ஷூவை நாக்கால் தொடும்படி துன்புறுத்தியுள்ளனர். இதில் அகில்தேவ் கண்ணில் பலத்தகாயம் ஏற்பட்டுள்ளது. இது குறித்து புகார். வழக்கு பதிவு செய்து விசாரணை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 93. | 11.04.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஆணையூர் பஞ்சாயத்திற்குட்பட்ட கட்டளைப்பட்டி கிராம தலித் மக்கள் வசிக்கும் பகுதியில் திடீரென குடிநீரை நிறுத்திய பஞ்சாயத்து நிர்வாகத்தினர் மீது நடவடிக்கை எடுக்ககோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட ஆட்சியரிடம் மனு. | தலித்துகளுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |